விடுத்து, எந்த அளவுக்கு முற்றிலும் ஒழித்து, தமிழக மக்களுக்கு, தமிழ்ச் சமுதாயத்திற்கு நாம் ஆற்ற வேண்டிய பணியில் இந்த மாமன்றம் உதவும் வகையில் நீங்கள் எல்லோருக்கும் அறிவுரை கூறி, அணைத்துச் செல்ல வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இன்றிலிருந்து கட்சிக்கு அப்பாற்பட்டவர்கள் என்று நான் குறிப்பிட்டேன். அந்த மாபையும் நீங்கள் காப்பாற்றி அனைவரையும் அணைத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நீங்கள் சபாநாயகராக இருக்கின்ற காலம் வரை ஒரு அருமையான எடுத்துக்காட்டாக அமர்ந்து பணியாற்றுவீர்கள் என்ற நம்பிக்கையை நீங்கள் எல்லோருக்கும் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, சபாநாயகர் பொறுப்பிலிருந்து வழுவினார், ஒரு தனிப்பட்ட கட்சிக்குத் துணை நின்றார், சபாநாயகர் ஆட்சிக் கட்சிக்குத் துணை நின்றார் என்ற குறை இல்லாமல், அதே நேரத்தில் எந்தக் காரணத்தைக் கொண்டும் எதிர்க்கட்சியினரை சபாநாயகர் உதாசீனம் செய்தார் என்ற அவச்சொல்லை வாங்காமல் பண்போடு நீங்கள் நடந்து கொள்வீர்கள் என்று சொல்லி நீங்கள் வாழ்க என்று வாழ்த்தி, உங்கள் பணிகள் வெல்க என்று கூறுகிறேன்.

துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற அருமை நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் உங்களுக்கு உற்று உதவுகின்ற நண்பராக நிச்சயம் நீங்கள் கடைப்பிடிக்கின்ற நேர்மையான வழி அவரும் செல்வார் என்று நம்பி எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை, எனது கட்சியின் சார்பாகவும், முதலமைச்சர் அவர்களின் சார்பாகவும், இந்த மாமன்றத்தில் தெரிவித்து அவரையும் வாழ்க, வெல்க என்று கூறி விடைபெற்றுக் கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** பேரவையின் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தங்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வரவேற்று, வாழ்த்தி பாராட்டப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் போலவே, துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற இளம் நண்பர் திருநாவுக்கரசு அவர்களையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வாழ்த்தி, வரவேற்று, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1977 ஜூலை 6] [திரு. மு. கருணாநிதி]

இந்தப் பேரவையினுடைய மாண்புகளும், மரபுகளும் தாங்கள் அறியாதது அல்ல. 1962 ஆம் ஆண்டு முதல் இந்தப் பேரவையிலே தாங்கள் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று ஆழ்ந்த அனுபவத்தையும் ஆற்றலையும் பெற்றுத் திகழ்கின்றீர்கள். நீங்கள் அமர்ந்திருக்கும் இந்த நாற்காலி சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் 1922 ஆம் ஆண்டு வெல்லிங்டன் பிரபுவும், வெல்லிங்டன் சீமாட்டியும் சென்னை மாநகரத்திலே அமர்ந்து, சென்னை மாகாண சட்டப் பேரவைக்கு—அப்போது கவுன்சில் என்று இதற்குப் பெயர்—வழங்கிய, ஆடம்பரமான, அலங்காரமான நாற்காலி யாகும். ஒருவேளை அந்த நாற்காலிதான் இப்போது இருக் கிறதோ, இல்லையோ—அது எனக்குத் தெரியாது. அந்த நாற்காலியை 1922 ஆம் ஆண்டு வெல்லிங்டன் பிரபுவும் அவருடைய துணைவியாரும் பரிசாக வழங்கினார்கள். அப்படி வழங்கிய நேரத்தில் வெல்லிங்டன் பிரபு குறிப்பிட்டார்—' இந்த மாமன்றம் 1921 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. பிரிட்டிஷ் பாராளுமன்ற மரபுகளைப் பின்பற்றி நடைபெற்று வருகிறது என்பதை அறிய மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்' என்று வெல்லிங்டன் பிரபு குறிப்பிட்டு இந்த நாற்காலியை அப்போது பரிசாக வழங்கினார்கள் என்று சரித்திரக் குறிப்புகள் கூறுகின்றன.

அப்பேர்ப்பட்ட, பெருமை மிகுந்த, நீண்டகால வரலாற்றுப் புகழ் வாய்ந்த ஒரு நாற்காலியில் தாங்கள் இன்றைக்கு அமர்த்தப் பட்டிருக்கிறீர்கள். இந்த நாற்காலியை கடந்த காலத்தில் பல சான்றோர்களும், பல ஆன்றோர்களும், பல மேதைகளும் அலங் கரித்திருக்கிறார்கள். இந்த நாற்காலியில் அமர்ந்தவர்கள் அமைச் சர்களாக ஆனதும் உண்டு; அமைச்சர்களாக இருந்தவர்கள் இந்த நாற்காலியில் அமர்ந்ததும் உண்டு. தங்கள் நிலை என்னவோ எனக்குத் தெரியாது. எனினும் தாங்கள் மேலும் பல பொறுப்புக்களை ஏற்றிட வேண்டுமென்ற அவாவினைத் தெரிவித்து, இந்த மன்றத்திலே உங்களை வாழ்த்தி, வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அவையின் முன்னவர் திரு. மனோகரன் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதுபோல் ஆளும் கட்சிக்கும் எதிர்கட்சிக்கும் சம நிலையில் தாங்கள் தீர்ப்புக்களை வழங்குவீர்கள் என்றும் இரு கட்சிகளையும் சமமாக நடத்துவீர்கள் என்றும்

நம்பிக்கை எனக்கு நிரம்ப உண்டு. ஏனென்றால் தங்கள் கடந்த கால சட்டமன்ற வாழ்க்கையில் அடிக்கடி சபாநாயகரிடத்தில் தகராறு செய்பவர்கள் தாங்களாகவேதான் இருந்திருக்கிறீர்கள். அவைகளில் நியாயமான கோரிக்கைகள் இருந்திருக்கும் அல்லது சபாநாயகரால் வேறுவிதமாகத் தீர்ப்பளிக்கப்பட்ட கோரிக்கைகளும் இருந்திருக்கும். ஆனாலும் அதேநேரத்தில் சபாநாயகருக்கு அடங்கிச் செல்லும் பெருந்தன்மையையும் உங்களிடத்தில் நாங்கள் பல நேரங்களில் கண்டிருக்கிறோம். அந்தப் பெருந்தன்மை இன்றைக்கு நீங்கள் அமர்ந்திருக்கின்ற இருக்கைக்கு மேலும் புகழ் சேர்ப்பதாக அமையும் என்று கருதுகிறேன். ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் சமமாக—உங்களுடைய பெயரே முனு ஆதி; முனுவை ஆளும் கட்சிக்கும் ஆதியை எதிர்க்கட்சிக்கும் தாங்கள் பகிர்ந்தளிக்க வேண்டும். ஆதியில் இருந்த கட்சி அல்லவா? அப்படிப் பகிர்ந்தளிப்பீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். பிடில் வாசிக்கின்றபோது அதிலுள்ள வில்லைப்போன்று—இந்தப் பக்கம் இழுத்தால் ஒரு நாதம் வரும். அந்தப் பக்கம் இழுத்தால் இன்னொரு நாதம் கிளம்பும். அதேபோல் ஆளும் கட்சிப் பக்கம் இழுத்தாலும், எதிர்க்கட்சிப் பக்கம் இழுத்தாலும் இனிய நாதம் கிளம்பவேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

(முற்பகல் 9.20)

இந்தச் சட்டமன்றத்தை அப்படி நீங்கள் நடத்துவதற்கு எதிர்க் கட்சியின் சார்பில் குறிப்பாக அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படும், எங்களுடைய ஒத்துழைப்பு என்றென்றும் உங்களுக்கு இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். துணைத் தலைவரைப் பொறுத்த வரையில் அண்ணா அவர்கள் இருந்தபோது இந்தப் பதவியை எதிர்க் கட்சிக்கு வழங்க முன்வந்தார்கள். அந்த முறை இப்போது கடைப்பிடிக்கப்படவில்லை. அதற்காக நாங்கள் வருத்தப்படவில்லை. இந்த மாமன்றத்திற்கு ஒருமனதாகத் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிற தங்களையும், துணைத் தலைவர் அவர்களையும் வரவேற்றுப் பாராட்டி மகிழ்ந்து அமர்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த அவையின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுபற்றி என்னுடைய மகிழ்ச்சியையும் பாராட்டுதல்களையும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக